

# திராவிட முன்னேற்றக் கழகம்

## சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி

## 179வது வட்ட தி.மு.க.

**இல்லம் :**
எண் 7, கோகிலம், 2வது குறுக்குத் தெரு,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**அலுவலகம் :**
167, வேளச்சேரி மெயின் ரோடு, வேளச்சேரி,
சென்னை - 600 042.

Tel. : +91 98417 33190
Email : mathivan69@gmail.com

**பொ.த. மதிவாணன், MBA, LL.B**
**செயலாளர்**

நாள் : 25.12.2019

பெறுநர்

திருமதி. **தமிழச்சி தங்கபாண்டியன்** அவர்கள்
நாடாளுமன்ற உறுப்பினர் - தென்சென்னை,
இந்திய அரசு,
தமிழ்நாடு.

பொருள் : தென்சென்னை - வேளச்சேரி தொகுதி -
179வது வார்டு - வேளச்சேரி காந்தி சாலையில் அமைந்துள்ள
I.I.T. நுழைவு வாயிலை திறக்க கோரிக்கை.

----------

வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில் உள்ள 179வது வார்டு வேளச்சேரி காந்தி சாலையில் அமைந்துள்ள I.I.T. நுழைவுவாயில் நேற்றிரவு (24-12-2019) திடீரென்று எந்த ஒரு காரணமுமின்றி மூடப்பட்டது. இதனால் இப்பகுதியில் வசித்து வரும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

1964-ஆம் ஆண்டு I.I.T. Madras துவக்கப்பட்டபோது மேற்குறிப்பட்ட காந்தி சாலையை ஒட்டியுள்ள பெரும்பாலான நிலங்கள் இப்பகுதி மக்களிடம் I.I.T. நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டது. அவ்வாறு நிலங்களை கையகப்படுத்தபட்டபோது இப்பகுதி மக்களின் நலன்களிலும் வளர்ச்சியிலும் I.I.T.நிறுவனம் பெரிதும் உதவும் என்று மக்களிடம் உறுதி அளித்ததின் பேரில் நிலங்களை கையகப்படுத்தி I.I.T. Madras என்ற நிறுவனத்தை கட்டினார்கள்.

ஆனால் தற்போது எந்தவொரு காரணமும் இன்றி 24-12-2019 அன்று இரவு மேற்கண்ட நுழைவு வாயில் திடீரென்று மூடப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் கீழ்க்கண்ட காரணங்களால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

1. I.I.T. யில் உள்ள Vanavani மற்றும் KV IIT பள்ளியில் படிக்கும் இப்பகுதியில் உள்ள மாணவ. மாணவியர் 2 கிலோ மீட்டர் சுற்றி செல்ல வேண்டியுள்ளது.

Scanned by CamScanner



# திராவிட முன்னேற்றக் கழகம்

## சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி மேற்கு பகுதி

## 179வது வட்ட தி.மு.க.


**பொ.த. மதிவாணன், MBA, LL.B**
**செயலாளர்**

**இல்லம் :**
எண் 7, கோகிலம், 2வது குறுக்குத் தெரு,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**அலுவலகம் :**
167, வேளச்சேரி மெயின் ரோடு, வேளச்சேரி,
சென்னை - 600 042.

Tel. : +91 98417 33190
Email : mathivan69@gmail.com


நாள் : 25.12.2019

2. I.I.T.யில் தற்போது பணிபுரியும் நிரந்தர ஊழியர்கள் மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் குறித்த நேரத்திற்கு வேலைக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

3. மேலும் எற்கனவே வேலை செய்து ஓய்வு பெற்றவர்கள் பென்ஷன் பெறுவதற்கும், I.I.T.யில் உள்ள மருத்துவமனைக்கு செல்வதற்கும் தடுக்கப்பட்டுள்ளது.

4. I.I.T.யில் உள்ள கமர்ஷியல் நிறுவனங்கள் குறிப்பாக உணவகங்கள், கம்ப்யூட்டர் சென்டர்கள் லாபகரமாக செயல்படுத்துவதற்கு, இந்த கமர்ஷியல் தோழில் நடத்தும் குத்தகைகாரர்களின் வேண்டுகோளை ஏற்று இந்த காந்திசாலை I.I.T. நுழைவுவாயில் மூடப்பட்டுள்ளது, என்று இப்பகுதி மக்கள் கருதுகிறார்கள்.

எனவே தாங்கள் தயவுகூர்ந்து மேற்குறிப்பிட்ட பிரச்சினையை ஆய்வு செய்து வேளச்சேரி காந்தி சாலையை ஒட்டியுள்ள பகுதியில் வசிக்கும் பொதுமக்கள், மாணவ மாணவியர்கள், I.I.T.யின் இந்நாள் மற்றும் முன்னாள் ஊழியர்களின் நலன் கருதி வேளச்சேரி காந்தி சாலையில் உள்ள I.I.T. நுழைவுவாயிலை உடனடியாக திறந்து வைக்க நடவடிக்கை எடுக்க வேணுமாய் அன்புடன் வேண்டுகிறேன்.

நன்றி! வணக்கம்!

அன்புடன்,

பொ.த. மதிவாணன், MBA, LLB

நகல்:

திரு. **மா. சுப்பிரமணியன்** அவர்கள்
சைதை சட்டமன்ற உறுப்பினர்

திரு. **வாகை சந்திரசேகர்** அவர்கள்
வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர்

Scanned by CamScanner